# யாதுமாகி...

ஆளுமையின் ஓர் அங்கம்

*முதுகலை & தமிழாய்வுத்துறையின் மாதாந்திர மின்னிதழ்*

**மலர் – 01** **இதழ் – 04** **நவம்பர் – 2023**

திருவள்ளுவர் ஆண்டு
2054 (ஐப்பசி – கார்த்திகை)



**முதுகலைத் தமிழாய்வுத்துறை**

**ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)**

**தேசியத் தர மதிப்பீட்டு நான்காம் சுற்றில் 'A++' அங்கீகாரம் பெற்றது** (CGPA 4-க்கு 3.69)

**(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)**

திருச்சிராப்பள்ளி – 620020

தமிழ்நாடு, இந்தியா

இதழ் : **யாதுமாகி**

முதன்மையாசிரியர் : முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன்,
தேர்வு நெறியாளர்,
இணைப்பேராசிரியர் & தமிழாய்வுத்துறைத் தலைவர்.

இணை ஆசிரியர் : முனைவர் வ.முஹம்மது யூனுஸ், இணைப்பேராசிரியர்

துணை ஆசிரியர் : திரு. க.இம்தாதுல்லாஹ், இணைப்பேராசிரியர்

பொறுப்பாசிரியர் : **திரு. வீ.விஜய்**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை.

பிரதி : மின்னிதழ்

வெளியீடு : **நவம்பர் – 2023**

---

**இதழாசிரியர் குழு**

முனைவர் த.செல்வராசு

முனைவர் ஷே.நாகூர்கனி

திரு. கா.முகமது இஸ்மாயில்

முனைவர் மு.சாதிக்பாட்சா

முனைவர் அ.தௌஃபீக் ரமீஸ்

முனைவர் க.சிராஜுதீன்

முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு

முனைவர் க.இக்பால்

முனைவர் மு.ஹ.ஜஹானாரா

**மாணவ ஒருங்கிணைப்பாளர்கள்**

ப.அ.முஹம்மது ஆதில் முர்ஷித்

ஷா.முஹம்மது அஸ்ரின்

ஜோ.ஜார்ஜ் இம்மானுவேல்

பி.லீ.தயாநிதி

ஷா.முகமது அர்ஷத்

உ.பாபர் முகமது இஸ்மாயில் காஜா

ஜா. முகமது இலியாஸ்

மு.யாசர் அராபத்

மு.முகமது இமாதுதீன்

ரா.பிரீத்தி

ம.தாரணி

செ.ராகவி

---

பாதைகள்
பயணங்களுக்காகவே…
பாதைகள் தரும்
பருவங்களாய்,
பருவங்கள் தரும்
பாடங்களாய்,
பாடங்கள் தரும்
பயங்களாய்,
பயங்கள் தரும்
பக்குவமாய்,
பக்குவம் தரும்
பாரங்களாய்,
பாரங்கள் தரும்
பரவசமாய்,
பரவசங்கள் தரும்
பார்வையில்
பரிணமித்து
பரிமாணித்து
பறைசாற்றிட
'யாதுமாகி' நிற்கிறது
தமிழ்…

– **வீ.விஜய்**
(பொறுப்பாசிரியர்)



### காதலின் அர்த்தம்

கொள்ளை நோயின் மறுபெயர் காதல்
கொண்ட கொள்கை மறப்பது காதல்
கொசுவைப்போன்று கொடியது காதல்
அனைத்தும் அறிந்துமே அதிலே தொலைந்தேன்

### காதல் மலரும்

அறிவை இழந்தால் காதல் ஒளிரும்
அளவாய் இருந்தால் அன்பு மலரும்
அடடா என்று சொல்ல துடிக்கும்
அருகில் சென்றால் இன்பம் பிறக்கும்

### காதலின் வலி

காதல்னா என்னான்னு
தெரியாம இருந்தேன்...
உன்னால இப்போது
இந்த உலகையே மறந்தேன்...
நீ பேசும் அழகைக்
கவிதையாய் வரைந்தேன்...
அதை நினைத்து நினைத்து
இரவெல்லாம் கரைந்தேன்...



ஷா. முஹம்மது அர்ஷத்
முதுகலை இரண்டாமாண்டு.

## ஏன் இந்த விளையாட்டு?



நுரைத்து நுரைத்து பொங்கும் கடலே!
என்முன் அலைபோல
திகைப்பூட்டுவது
போதுமடி!
விழி பார்க்க போதா
விரிந்த கோல மென்னடி?
நீல உடையை உடுத்திய
விசும்பிற்கும் உனக்கும்
வேறுபாடென்னடி?
சிரித்து சிரித்து என் முன்
விளையாடிய தென்னடி?
பின்பு வெள்ளமாய் வந்து என்னை
சிறையெடுத்ததேனடி???



வி. ஹரிஷ்ராஜ்,
முதுகலை முதலாமாண்டு.

## வண்ணத்துப்பூச்சி



கவனத்தை ஈர்ப்பதில்
கதாநாயகியாகிறாய்...
இமைகள் இல்லாததால் என்னவோ
உன்னை இமைக்காமல் பார்க்கிறார்கள்.
பொறுமையைப் பாடம் சொல்லும்
உன் வாழ்க்கை
ஒரு வியப்பே...
இலைக்குச் சுமையின்றி சுகமாக
முட்டையாய், புழுவாய்
பரிணமித்து
குளிருக்கு இதமாய் சுற்றி
கூட்டுப் புழுவாயும்
இறுதியில் உருவம் பெற்று
அருவறுத்தவர்களும்
"ஆ"வென்று வாய்பிளப்பதற்குள்
அங்கிருந்தும் சட்டென பறந்துவிட...
புரிகிறது உன் பாடம்
அங்கீகாரம் பெற
அமைதியும்
தேவைப்படுகிறது



செ.ராகவி,
இளங்கலை முதலாமாண்டு.

## 'உன்னைப்' பெறுவாய்

எதைத் தொலைத்தோம்
என்றே தெரியாமல்
தொலைந்ததை தேடுகிறோம்...
வெகுநாளாய் நாம்.
தொலைத்த இடம்போய்
தேடு என்பார்...
தொலைத்தது எதுவென
தெரியாது
தேட எங்கே போவது?
சதா இதே சங்கதி
யாரிடம் நோக...
தொலைந்திருப்பின்
அது உனக்கானதல்ல,
இருந்தாலும்
தேடு
தவறில்லை.
முடிவில் பெறுவாய்,
உனக்கானதையல்ல
"உன்னை"



பீ. முகமதுசில்மிசுல்தான்,
முதுகலை இரண்டாமாண்டு.

## விதவைக் கோலம்...

- தலைமகளும்
  கடை மகளும்
  கன்னிகளாய் இருக்க
  இடைமகள்கள் ஏனோ
  விதவைக் கோலம்
  தருகிறார்கள்

  குறிப்பேடுகள்...



- வான் கூந்தலில்
  வைத்த
  மேகப் பூக்கள்
  உதிராமலிருக்க
  மின்னலை ஊசியாய்
  குத்தியது யாரோ?



மு. முகமது இமாதுதீன்,
இளங்கலை இரண்டாமாண்டு.

## அக்காவின் பாசம்

அன்னையாக அரவணைத்து
ஆசானாக வழிகாட்டி
இன்பத்தை இன்முகத்தோடு தந்து
ஈடில்லா அன்பை பொழிந்து
உன்னையே உருக்கி
ஊர்முன் எனை பெருமைப்படுத்தி
எதற்கும் துணிந்தவளாய் எனை மாற்றி
ஏக்கங்களை எல்லாம் நீக்கி
ஐவராய் எங்களை இணைத்து
ஒற்றுமையாக நடத்தி
எனக்காக உனையே உளியாக மாற்றி
என்னை செதுக்கிய சிற்பியே....



சே.ஜெரினா பேகம்,
இளங்கலை முதலாமாண்டு.

## என்னவள்...

பொறுமையானவள்
இப்போதெல்லாம்
பொறாமைப்படுகிறேன்...
கவலைகள்
துளியும் இல்லாதவள்
இப்போதெல்லாம்
அடிக்கடி உடைகிறேன்...
வாழ்வை நினையாது
வாழ்ந்து சாகவே
அதீத விருப்பம்...
"தனிமை"
தாங்கொண்ணா வலிதான்
வலியிலும் வரம்
என்னவன்
என்னோடு இருக்கும்
தருணம்



ரா. பிரீத்தி,
இளங்கலை மூன்றாமாண்டு.




## பொம்மை மனிதன்



தன் அறையில் இருந்து பெட்டிபடுக்கையை எடுத்து வந்தான் கோபால்.

வெளியே போடா நாயே தயவு செய்து இங்கே வந்துவிடாதே என்று கதவைச் சாத்தினான்
வீட்டின் முதலாளி வெளியிலும் மழை சரமரியாத தாக்கியது கோபாலுக்கு உடல் குளிர்ந்தது ஆனால் உள்ளம் நொந்தவனாய் மழையில் நடந்து சென்றான்.

ஒரு கடையின் வாசலில் கவலைகளோடு உறங்காமல் படுத்தான். மறுநாள் காலை வெயில் பல்லைக் காட்டியது வழக்கம் போல ஒவ்வொரு கடையாக வேலைக் கேட்டு ஏறி இறங்கினான்.
பெரிய பழக்கடையில் வேலை கிடைத்தது.
"தம்பி ஒரு மணி நேரத்திற்கு 20 ரூபாய் 12 மணி நேரத்திற்கு 240 ரூபாய் "என சட்டம் போட்டார்.

"ரொம்ப நன்றி அண்ணே" என்றான்.

கடையின் முதலாளியே வேலையை பிழிந்து எடுத்தார் கோபால் முகம் சுளிக்காமல் வேலையை பார்த்தான்.

இரவு 10 மணி ஆனதும் சம்பளம் கையில் வந்தது உழைப்பிற்கேற்ற ஊதியமே இல்லை என்று புலம்பிக்கொண்டே நடந்து சென்றான்.
இப்படியே சில நாட்கள் கடந்தது………………

அந்த வேலையையும் கைவிட்டான் மண்டபத்தில் சில குப்பைகளை நாயோடு நாயாகச் சேர்ந்து இவனும் எதையும் தேடி எடுத்தான்.

யாரோ ஒருவன் கோபாலின் சட்டையை பிடித்து தரதரவென இழுத்து அடித்து,
"எச்சப் பொறுக்கி நாயே எங்க வந்து யாரிடத்துல என்ன பண்ற நீ ?"

கோபாலை பேசவிடாமல் அடித்து சரமாரியாக தாக்கப்பட்டான் கோபால் வருத்தத்துடன்
அந்த இடத்தை விட்டு கிளம்பினான்,

முகமெல்லாம் ரத்தம் சொட்ட சொட்ட நடந்து சென்றான். இதை அத்தனையும் தினேஷ் பார்த்துக்கொண்டிருந்தான், கோபாலை அழைத்த தினேஷ் தன்னிடமிருந்த கைக்குட்டையை எடுத்து நீட்டினான் அதை வாங்கி முகத்தில் உள்ள ரத்தத்தை துடைத்தான்
"ரொம்ப நன்றி சார்" என நடையைக் கட்டினான்.

அண்ணே நடந்தது நானும் பார்த்தேன் அடிச்சவன் அரசியல்வாதி நம்ம ஒன்னும் பண்ண முடியாதுன்னு வாங்க ஆஸ்பத்திரிக்கு போவோம் என உரிமையை கொண்டாடினான் சுற்றும் மற்றும் பயத்தோடு பார்த்துக்கொண்டு இல்ல சார் வேணாம் நானே பாத்துக்கிறேன் நீங்க போங்க என்றவுடன் தினேஷ் சற்று சோகமாக ஒரு நல்ல வேலை இருக்கு செய்றீங்களா? என்றான்.

கோபாலின் பற்களில் ரத்தம் சொட்ட சிரித்துக் கொண்டே இந்த பைத்தியத்துக்கு எல்லாம் யாரு சார் வேலை கொடுப்பா?

தினேஷ் கோபமாக, யார் அண்ணே பைத்தியம் உங்களை அடிச்சானே அவன் தான் பைத்தியம் நீங்க இல்ல வாங்க ஆஸ்பத்திரிக்கு போகலாம் என்று சொல்லிக்கொண்டே நடந்தார்கள் …
நல்ல நண்பர்கள் ஆனார்கள்
துரை,… இராமு, …ராஜு….
எங்க இருக்கீங்க?? என்றவுடன் கதவை திறந்து கொட்டாவி விட்டுக் கொண்டே என்னடா?" யார் இவரு முகமெல்லாம் காயமா இருக்கு.

"நான் சொல்றேன் இவரை ரூமுக்கு கூட்டிட்டு போ நான் வரேன் என்றான் தினேஷ்,

ராமு பரிதாபத்துடன், அண்ணா உங்க பேரு என்னா? என ஆரம்பித்து மூன்று பேருடன் கோபால் நடந்ததைக் கூறினான்,

அந்த மூன்று பேரும் கோபத்தில் கொந்தளித்து "நீ ஏன்னா அடி வாங்குன என கூறிக்கொண்டே அவனை சும்மா விடக்கூடாது என துடித்தார்கள்,"
கோபால் சிரித்துக் கொண்டே……………….

எனக்கு உடம்புல அழுக்கு அவனுக்கு மனசுல அழுக்கு அவ்வளவுதான் என்றான்.
மூவரும் சோகத்துடன் சிரித்தார்கள்.

சில நாட்கள் கடந்தன......

கோபாலுக்கு உடலின் காயங்கள் மறைந்தன ஆனால் உள்ளத்தின் காயம் மறையவே
இல்லை,,

கோபாலுக்கு டான்ஸெல்லாம் கற்றுக் கொடுத்தார்கள் சந்தோசமாக நாட்கள்
கடந்தன………

அன்று ஒரு நாள்……

தினேஷ் மகிழ்ச்சியில் துள்ளி கொண்டு வந்தான்,

ராமு, துரை, ராஜு எங்க இருக்கீங்க இங்க வாங்கடா என சந்தோசத்தில் மூவரையும் கூப்பிட ராஜு, துரை மட்டும் கதவை திறந்தார்கள்.

என்னடா முகத்துல அவ்வளவு சந்தோஷமா இருக்க உங்க பாட்டி மண்டைய கிண்டய ஏதும் போட்டாங்களா என கிண்டலடித்தான்.

ஹேய்... என நமட்டு சிரிப்புடன்

நமக்கு நல்ல ஆர்டர் ஒன்னு கிடைச்சிருக்கு என்று சொன்னவுடன் மூவர் முகத்திலும் மகிழ்ச்சி தாவி கொண்டு வந்தன.

மறுநாள் காலையில் அனைவரும் கிளம்பினார்கள்

துரை வாத்து வேஷமும், ராஜு சோட்டா பீம் வேஷமும் கோபால் விக்கிமோஸ் வேஷமும் போட்டார்கள். தினேஷும்,துறையும் பொய்க்கால் குதிரை வேஷமும் போட்டார்கள் கோபால் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே திகைத்தான், அனைத்து குழந்தைகளும் பெண்களும் விக்கி மோஸிடம் போட்டோ எடுத்துக் கொண்டார்கள்.

விக்கிமோஸ் வேடத்தில் இருக்கும் கோபாலுக்கு உடலில் வேர்வை ஆறாய் ஓடின அதோடு டான்ஸ் ஆடினான், கார்ட்டூனை விரும்பும் உலகத்தில் குழந்தைகளிடத்தில் விக்கிமோஸ் அன்றைய காலத்தில் இருந்து இன்றைய காலம் வரைக்கும் நீங்கா இடம் பிடித்திருக்கிறது ஏதோ குழந்தைகளுக்கு பரிசு வழங்கும் விழா போல என்று மனதில் நினைத்துக் கொண்டு கழிவறைக்கு சென்றான்.

அந்த நேரத்தில் யார்ரா ஆர்டர் கொடுத்தது?

என்று கோபத்துடன் கத்தி கொண்டு வந்தான்.

தினேஷ் சற்று பொறுமையாக என்ன சார் வேணும் என்றான். எங்கே விக்கிமோஸ காணோம் என கேட்டவுடன் தினேஷ் கண்களை உருட்டியவாறு பாத்......பாத்ரூம் போயிருக்கான் சார் இப்ப வந்துருவான் என்றான் தினேஷ், எரிச்சலோடு கடும் கோபத்துடன் பாத்ரூம் சென்றான் அவன் ஒரு சிறுவனின் சிப்பை சரி செய்து கொண்டிருந்தபோது அந்த நபர் அதை கண்டதும் கோபத்துடன்

யார் நீ???

"என் பையனை என்னடா பண்ற? "

என்று கேட்டு முடிப்பதற்குள் தன் முகத்தை காட்டினான்,

அவன் அதிர்ந்து போனான்

நீயா? "எவ்ளோ அடி வாங்கினாலும் திருந்த மாட்டியா இங்கிருந்து போடா என விரட்டியடிக்கப்பட்டான்,

மீண்டும் தன் வேடத்தை போட்டான் கோபால்,

அரசியல்வாதி மகன் அப்பா விக்கிமோஸ் விக்கிமோஸ் என அடம் பிடித்தான்.

"அப்புறம் பார்க்கலாம் வேலை இருக்கு"

என சமாதான வார்த்தையை தன் மகனிடம் காட்ட அவனோ ஓவென அழுதான், சரி வா போகலாம் ...

என தோளில் தன் மகனை தூக்கினான் அரசியல்வாதி விக்கிமோஸிடம் கைகுலுக்கி போட்டோ எடுத்து டான்ஸ் என நிமிடங்கள் சில கரைந்தன……....

சந்தோஷமாக இருந்தது காரில் அந்த அரசியல்வாதி தன் மகனை காரில் உட்கார வைத்து அந்த விக்கிமோஸிடம் 100 ரூபாய் பணம் கொடுக்க, அவன் வாங்க மறுத்தான்,

கோபால் சற்று யோசித்தவாறு, தன் முக வேடத்தை கலைத்தான்...

அதிர்ந்து போன அரசியல்வாதி நீயா என்றவுடன்.....

கோபால் கவலையோடு……………..

"எங்களுக்கு இதான் சார் தொழில்"

என நமட்டு சிரிப்புடன் சொன்னான்

"வேஷம் போடுறது மனிஷன்களுக்கு ஒன்னு புதுசு இல்ல சார் அகவேஷம்,

புறவேஷம்

அவ்ளோதான் சார்

என கோபால் சொல்லும்போதே……

திரு பரதன் அவர்களை அன்போடு மேடைக்கு அழைக்கிறோம் என்ற குரல் கேட்க…………

இப்போ கூட நீங்க என்னைவிட ஒரு நல்ல வேஷம் போட்டுட்டு மேடைக்கு
போகப்போறிங்க.....

"நா வர்றேன் சார்"

என நடையை கட்ட

பரதன் கோபாலை பார்த்தபடியே மேடைக்கு சென்றான்.



**அ. ரியாஸ் முகமது,**

**முதுகலை இரண்டாமாண்டு.**

## புகை வண்டியா? புதையல் வண்டியா?

**(தொடர்கதை)**

**யாதுமாகி இதழின் அக்டோபர் மாத இதழின் வெளியான கதையின் தொடர்ச்சி...**

கையில் இருந்த குறிப்புகளை வைத்து விட்டு எனக்கு எதிர்திசையை பார்க்தேன் மழைப் பொழிந்தது அப்போது எனக்கு ஒரு எண்ணம். சில மாதங்களுக்கு முன் மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து விடுதிக்கு பயணித்தேன். செல்லும் வழி எங்கும் மழை பொழிந்து கொண்டிருந்தது நான் ஒன்பது மணிக்குள் விடுதியின் உள்ளே இருக்க வேண்டும் என்ற சூழலில் மழையில் நனைந்து கொண்டு விடுதிக்கு செல்லும் வழியில் ஒரு தாய் மகனையும், பெண் குழந்தையும் மழையில் நனையக் கூடாது என்ற காரணத்தினால் மகனுக்கு ஒரு துண்டையும் இடுப்பில் இருந்த குழந்தைக்கு ஒரு முனை (முந்தானை) மூடும் வகையில் தனது குழந்தைகளை முழங்கால் கீழ் தண்ணீர் இருக்கும் நிலையில் கூட குழந்தைகளை அழைத்துச் சென்றாள்.

அவர்கள் பின் நானும் அந்த வழியில் விடுதி நோக்கி சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது மகனின் தலையில் இருந்து துண்டு கீழே விழுந்தது. அவர்கள் பின் சென்று இருந்த நான் என் தலையில் இருந்து கருப்பு நிறம் கொண்ட தொப்பியை கழட்டி எடுத்துவிட்டு பிறகு மகன் தலை நனைய கூடாது என்ற காரணத்தினால் அந்த மகனின் தலையில் அணிந்து விட்டு அவனைப் பார்த்து சிரித்து விட்டு வேகமாக விடுதியை நோக்கி புறப்பட்டேன். வேகமாக செல்லும் போது மறுபடியும் எனக்குள் (மனம்) ஒரு செய்தி ஓடத் தொடங்கியது.

ஒரு முறை பழனியில் நான் வேலைக்குச் சென்று விட்டு செல்லும் வழியில் மழை பொழிந்தது அப்போது எனக்கு நடந்த செய்திகளை நினைத்துக்கொண்டு விடுதியை நோக்கி சென்றேன்.

அப்போது புகை வண்டி திண்டுக்கல் நிலையத்திற்கு உள்ளே நுழையும் சத்தம் கேட்டது. அவர்களையும் எனையும் சேர்த்து ஐந்தாவது நடைமேடையில் இருக்கும் அனைவரும் புகைவண்டி வரும் திசையை நோக்கி பார்த்தார்கள்.

மெல்ல மெல்ல எங்களை கடந்து நின்றது. அப்போது கடைசி இரண்டு பெட்டிகள் என் அருகில் வந்து நிற்க நான் வந்து விட்டேன் என்ற அடையாளத்தை தன் ஒலியின் மூலம் தெரிவித்தது.

அதில் இருந்து பயணச் சீட்டு பரிசோதகர் இறங்கினார். நான் அவரிடம் சென்று இந்த புகைவண்டி செல்லும் திசை நோக்கி காட்டி இந்த வழியில் செல்லும்மா என்றேன்? பிறகு இந்த புகைவண்டியின் எண்களைச் சொல்லி கேட்டேன்? மறுமுறை இந்த புகைவண்டி திருச்சிராப்பள்ளி தானே செல்லுகிறது என்றேன். அவர் கோபம் அடைந்து உன்னிடம் பயணச்சீட்டு இருக்கிறதா என்றார்.

நானும் எடுத்து காண்பித்தேன் அப்போது அவர் அதில் இருக்கும் நேரம் பார்த்து விட்டு என்னப்பா இந்த புகைவண்டி பயணச்சீட்டு எடுத்த நேரம் ஆறு மற்றும் சில நிமிடங்கள் காட்டுகிறது.

ஆனால் இப்போது மணி எட்டு மணி ஆகிற்று என்றுச் சொல்லும் நேரத்தில் புகைவண்டி நிலையத்தில் ஒலிப் பெருக்கியில் இருபது மணித்துளி என்று ஆங்கிலம்,ஹிந்தி மற்றும் தமிழில் அருகில் இருந்த வயது முதிர்ந்த ஒருவர் சொல்லும் குரல் கேட்டது. கேட்டு விட்டு பிறகு பயணச்சீட்டுப் பரிசோதிக்கும் ஒருவரிடம் பழனியில் இருந்து வந்து புகைவண்டியை விட்டது வரையும் நடந்த செய்திகளை அவரிடம் சொல்லி கொண்டு இருக்கும் நேரத்தில் புகைவண்டி எடுக்கும் ஒலி ஒலித்தது.

கடைசி இரண்டு பெட்டிகளும் அதிக மக்கள் இருந்தார்கள் நான் ஏறுவதற்கு இடம் இல்லை. அப்போது, பரிசோதகரிடம் நான் முன்பதிவு செய்த பெட்டியில் ஏறிக் கொள்ளலாமா என்றேன். அவர் 'தம்பி எனக்கு இது தான் வேலை' என்றுச் சொல்லி விட்டு முன் பெட்டியில் ஏறிவிட்டார்.

முன்பதிவு பெட்டியில் ஏறினால் அபராதம் செலுத்த வேண்டி இருக்கும் என்ற காரணத்தினால் கூட்டம் இருக்கும் (பொது வகுப்பு) பெட்டியில் ஏறுவதற்கு படியில் நின்று இருக்கும் நபரிடம் கேட்டேன். இடம் இல்லை தம்பி என்றார். அவருக்கு பின் இருந்த நபரிடம் கேட்டேன். தம்பி பின்னாடி போ என்றார்.

**தொடரும்...**



உ. பாபர் முகமது இஸ்மாயில் காஜா,
முதுகலை இரண்டாமாண்டு.







பணம். புகழ். உயரம் !

இது மூன்றையும் பிடிக்க நல்ல வழி தீய வழி என இரண்டு உள்ளது. இந்த இரண்டு வழியிலும் சென்று நிலையான/நிலையற்ற இடத்தை பிடித்தவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், நல்ல வழி தீய வழி இந்த இரண்டிற்கும் இடையே ஒரு "பொதுவான காரணி உள்ளது. அது பயன்படுத்த படுகிறதா இல்லையா என்பது தான் கேள்வி. அந்த பொதுவான காரணி தான் "மனசாட்சி"!.

இது இருந்தால் நல்ல வழி. இல்லையெனில், தீய வழி என்று கூட சொல்லலாம். பணம் புகழ் சேர்க்க மனசாட்சியை கழட்டி வைத்து விட்டு செல்லும் பல பேரின் கதைகளில் ஒரு கதை இது.

Nightcrawler – 2014 ம் ஆண்டு ஆங்கிலத்தில் வெளியான இந்த திரைப்படம் மக்களிடையே மிகவும் வரவேற்பு பெற்றது. இந்த திரைப்படத்தை பார்த்து, ஈர்க்கப்பட்டு (inspire) பல மொழியில் உள்ள இயக்குனர்கள் இதே போல படத்தை தொடர்ந்து உருவாக்கி வருகிறார்கள். சமீபத்தில் மலையாளத்தில் வெளியாகி பெரும் வெற்றி பெற்ற "உண்ணி முகுந்தன் அசோசியேசன்" திரைப்படத்தை எடுத்துக் கொள்ளலாம்.

செய்திகள் ஒளிபரப்ப நிறைய தொலைக்காட்சிகள் போட்டி போடும். யார் எந்த செய்தியை, முக்கியமான செய்தியை, எவ்வளவு நேரத்தில் ஒளி பரப்புகின்றனரோ, அவர்களே முன்னிலையில் இருப்பார்கள் என்று தங்களுக்குள் போட்டி நடக்கும். "Exclusive, First on television " என்றெல்லாம் வார்த்தைகள் உபயோகித்து மக்களை இழுப்பர். இந்த செய்தி தொலைக்காட்சிகளுக்கு கொலை கொள்ளை விபத்து போன்ற செய்திகளை தருவது யார்?? பொதுமக்கள். அந்த பொதுமக்களுக்கும் முன்னால் இவர்களுக்கு தெரிய வேண்டும் அப்போது தான் TRP கிடைக்கும். இதற்கு உதவுவதற்கு பல நபர்கள் முன் வருவர். எவ்வாறெனில்,

கணினியையும், இணையத்தையும் பயன்படுத்தி போலீஸ் அதிகாரிகளின் walkie talkie யின் அலைவரிசை எண்ணை எடுத்து, இவர்கள் தெரிந்து கொண்டு, விபத்து கொலை போன்ற பொதுமக்கள் புகார் செய்யும் இடத்தை இவர்கள் தெரிந்து கொண்டு, காவலர்களுக்கு முன் இவர்கள் விரைந்து சென்று அந்த இடத்தை படம் பிடித்து விட்டு கிளம்பி விடுவார்கள். அதை பேரம் பேசி, எந்த செய்தி நிறுவனம் அதிக விலைக்கு எடுத்துக் கொள்கிறதோ அவர்களுக்கு விற்று விடுவார்கள். இதுவே இவர்களின் வேலை. !

எந்த பகுதியில் நடந்த விபத்து, எவ்வளவு தூரம் முன் சென்று படம் பிடித்துள்ளனர், கொலையின் வீடியோ கோப்பு என்றால் அதற்கு ஒரு விலை, கொள்ளை அடிப்பதை படம் பிடித்து அனுப்பினால் அது ஒரு விலை என ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு விலை. ஒவ்வொரு மதிப்பு

வேலை கிடைக்காமல் விரக்தியில் இருக்கும் கதையின் நாயகன், இந்த வேலையில் கத்துக்குட்டியாக உள்ளே நுழைந்து, எவ்வாறு பணம் சம்பாதித்து புகழ் சம்பாதித்து, இறுதியில் தான் சம்பாதித்த இடத்தை தக்க வைக்க எந்த அளவு எல்லைக்கு போகிறான் என்பதே படத்தின் கதை.

மிகவும் பரபரப்பாகவும், சுவாரசியமாகவும் செல்லும் இந்த படத்தின் இறுதியில் "Survival of the fittest" என்று கூறி நாம் சற்றும் யோசிக்காத ஒரு காரியத்தை நாயகன் செய்து காட்டும் போது, பல இடங்களில் நாம் கண்டும் காணாது, இல்லை நம் சுயநலத்திற்காக, அல்லது அவ்வாறு செய்யப்பட்ட பல காரியங்கள் நம் கண் முன் வந்து போகலாம் !



**லா. முகமது யூசுப்,**
**முதுகலை இரண்டாமாண்டு.**

# சித்திரம் பேசுதடி

**பெண்மை**



ரா. பிருந்தா,
இளங்கலை முதலாமாண்டு

**பன்முக இந்தியா**




த. மோகன தாரணி,
இளங்கலை இரண்டாமாண்டு

**ஒளிர் திங்கள்**



மு. கிருத்திகா,
இளங்கலை முதலாமாண்டு

**இயற்கை**



அ. ஹாஜிரா பானு,
இளங்கலை முதலாமாண்டு

**இன்றைய நாம்**



செ.ராகவி,
இளங்கலை முதலாமாண்டு